


| | |
|---|---|
| மேற்பார்வையாளர் | |
| வரைவாளர் நிலை-III | |
| அளவர்/உதவி வரைவாளர் | |

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Erode
Date:2023.11.18 16:58:02

Signature Not Verified
Signed by Executive Officer
Location:Erode
Date:2024.03.12 16:58:03

# நகர் ஊரமைப்பு துறை(DTCP)
## ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
## காசிப்பாளையம் பேரூராட்சி

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், காசிப்பாளையம் பேரூராட்சி, தடப்பள்ளி கிராமம் ரீ.ச.எண் 189/2B4-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப எண்: RU6NUIK9 நாள் : 11.10.2023

அளவு திட்டம் :1:400 (திட்டமில்லா பகுதி)

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பளவு : 2.45 ஏக்கர் (அ) 9920.00 ச.மீ

மனைப்பிரிவின் எல்லை : ........................................

நிலையிலுள்ள சாலை /அணுகு சாலை : ........................................

மனைப்பிரிவு சாலை : ........................................

ஒதுக்கிய மனைகள் : ........................................ 56

வ

**பொது ஒதுக்கீடுகள்: (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)**

I.மனைப்பிரிவின் சாலை (மூலைமுடக்கு உட்பட) பரப்பு = 3161.19 ச.மீ
(தான ஆவண எண்: 8159/2023, நாள்: 09.11.2023)

**II.பூங்கா**

i). ஒதுக்கப்படவேண்டிய பூங்கா பரப்பு : (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு)X 10%
= (9920.00-3161.19) X10% = 675.88 ச.மீ

ii) 10% பூங்கா பரப்பான 675.88 ச.மீ பரப்பளவிற்கு ஈடான அரசு வழிகாட்டி மத்திப்பீட்டின்படி உரிய தொகை ரூபாய் : 94,623/- தொகையினை உரிய அரசு கணக்கு தலைப்பில் 14.11.2023 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

**III.பொது உபயோகம்**

(A).உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு: (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு)X 0.5%
= (9920.00 - 3161.19)X0.5%=33.79 ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 60.30 ச.மீ(0.89%)
(தான ஆவண எண்: 8159/2023, நாள்: 09.11.2023)

(B).TANGEDCO க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு)X 0.5%
= (9920 - 3161.19)X0.5%= 33.79 ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 56.13 ச.மீ (0.83%)
(தான ஆவண எண்: 8160/2023, நாள்: 09.11.2023)

கட்டிட வரம்பு :
9மீ அகலம் வரை உள்ள சாலைகளுக்கு 1.5மீ-ம் விடப்படல் வேண்டும் .
9மீ முதல் 18மீ அகலம் வரை உள்ள சாலைகளுக்கு 3.0மீ ம் விடப்படல் வேண்டும்

மூலைமுடக்கு:
12மீ அகல வரையிலான சாலைகளுக்கு1.5மீ X 1.5மீ விடப்படல் வேண்டும்

## நிபந்தனைகள்:

1. அரசாணை எண் :18 ந.நி மற்றும் கு.நீ.வ துறை நாள்:04.02.2019 (ம) அரசாணை எண்:16 ந.நி மற்றும் கு.நீ.வ துறை நாள் 31.01.2020-ன் படி மனைப்பிரிவு சாலை மற்றும் 0.5% பூமி உள்ளாட்சிக்கும் 0.5% பூமி TANGEDCO அல்லது உள்ளாட்சிக்கு தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண்: 181 வீ.வ (ம) ந.வ.து நாள் 09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள் மழைநீர் வடிகால் வசதி மேல்நிலை நீர்தேக்க தெட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்குள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண்: 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாச்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் எந்தத்துறையாலும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்படவில்லை என்றும், செயல் அலுவலர், காசிப்பாளையம் பேரூராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கபட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அரியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்ப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாவே மனைப்பிரிவிக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்பதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6x4 என்ற அளவிலான நிரந்திர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதின் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையபத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதார் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
9. மனைகளின் ஊடே மின் கம்பி பாதை அமையுமாயின் சாலையின் போக்கிற்கு ஏற்ப மனுதாரர் தனது சொந்த செலவில் மாற்றி அமைத்த பின்னரே (அ) நீக்கிய பின்னரே மனைப்பிரிவிக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
10. பிரஸ்தாப மனைப்பிரிவுக்கு இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது மனுதாரரின் நில உரிமைத்தினை உறுதி செய்து பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
11. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதி மன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கல்ல.
12. மனைப்பிரிவினை சுற்றி சுற்றுசுவர் (COMPOUND WALL) அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்பு பாதை அமையும் வகையில் சுற்றுசுவர் இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

**SWP/DTCP/ERODE/LAYOUT NO: 465/2023**

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்